**நெல்லியாளம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 06.03.2023 ஆம் தேதி காலை திங்கட்கிழமை 11.00 மணிக்கு இந்நகராட்சியின் நகர்மன்றக் கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகளின் விவரம்.**

நகர்மன்ற தலைவர்,
நெல்லியாளம் நகராட்சி

**பொருள் எண்.1**

பந்தலூர் வணிக வளாகத்தில் செயல்பட்டு வரும் இந்தியன் வங்கி மற்றும் இந்தியன் வங்கி ATM க்கு குத்தகை காலம் UTIS-ல் 31.03.2023-ல் முடிவடைவதால், அரசானை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007 இன்படி 01.04.2023 முதல் மூன்றாண்டுகளுக்கு தற்போதைய வாடகை மதிப்பீட்டிலிருந்து 15% சதவீதம் உயர்வு செய்து குத்தகை காலம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து வழங்கப்பட வேண்டியுள்ளது.

| கடை எண் | பெயர் | 31.03.2023.-இல் மாத வாடகை | 15% சதவீதம் உயர்வு | 01.04.2023 முதல் உயர்த்தப்பட்ட வாடகை |
|---|---|---|---|---|
| 1 | இந்தியன் வங்கி ATM | 3558.00 | 534.00 | ரூ. 4092.00 |
| 2 | இந்தியன் வங்கி | 18053.00 | 2708.00 | ரூ. 20761.00 |

01.04.2023 முதல் மூன்றாண்டுக்கு 15% சதவீதம் உயர்த்தப்பட்ட வாடகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 76 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.2**

நெல்லியாளம் நகராட்சிக்கு சொந்தமான பந்தலூர் பஜாரில் அமைந்துள்ள வணிக வளாக கட்டிடத்தில் அஞ்சலக துறைக்கு குத்தகை விடப்பட்டுள்ள கடை எண்18 மற்றும் 19-ல் குத்தகை காலம் UTIS-ல் 31.03.2023-ல் முடிவடைவதால், அரசானை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007 இன்படி 01.04.2023 முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகை கால கொடுப்பு புதுபித்து வழங்கப்பட வேண்டியுள்ளது.

| கடை எண் | 31.03.2023 வரையிலான மாத வாடகை | 15% உயர்த்திய வாடகை | 01.04.2023 முதல் குத்தகை புதுப்பிக்கப்பட்ட மாத வாடகை |
|---|---|---|---|
| 18,19 | ரூ. 4548.00 | ரூ. 682.00 | ரூ. 5230.00 |

பட்டியலில் குறிப்பிட்டுள்ள கடை 01.04.2023 முதல் மூன்றாண்டுகளுக்கு 15% சதவீதம் வாடகை உயர்த்தி ரூ. 5230/- மாத வாடகைக்கு அஞ்சலகத்தில் குத்தகை காலம் நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 77 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.3**

அரசானையின் படி நெல்லியாளம் நகராட்சிக்கு சொந்தமான கட்டனக் கழிப்பிடம் குத்தகை காலம் 31.03.2023-ல் முடிவடைவதால் 01.04.2023 முதல் அரசானை எண்.92-ன் படி தற்போதுள்ள குத்தகை தொகையிலிருந்து 15%சதவீதம் உயர்த்தி குத்தகை புதுப்பிக்க மன்ற பொருள் வைக்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

| கடை எண் | குத்தகைக்கு விடப்படும் கழிப்பிடம் | தற்போது 01.04.2003 முதல் வாடகை |
|---|---|---|
| 067/37 | பந்தலூர் புதிய பேருந்து நிலையம் கட்டணக் கழிப்பிடம் | 1395.00 |
| 067/38 | பந்தலூர் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள கட்டணக் கழிப்பிடம் | 10143.00 |
| 067/33 | நாடுகானி பஜார் கட்டணக் கழிப்பிடம் | 2290.00 |

பட்டியலில் குறிப்பிட்டுள்ள அனைத்து கட்டனக் கழிப்பிடத்திற்கு தற்போதுள்ள வாடகை மதிப்பிலிருந்து 15% சதவீதம் உயர்த்தி குத்தகை காலம் 01.04.2023 முதல் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து வழங்க மன்றக் கூட்டத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.78 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.4**

அரசானை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007 இன்படி நெல்லியாளம் நகராட்சிக்கு சொந்தமான பந்தலூர் வணிக வளாகத்தில் அமைந்துள்ள கடைகள் புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடைகள் மற்றும் தேவாலா வணிக வளாகம் கடைகளின் குத்தகை காலம் 31.03.2023-ல் முடிவடைவதால் 01.04.2023 முதல் தற்போதுள்ள குத்தகை தொகையிலிருந்து 15%சதவீதம் உயர்த்தி குத்தகை புதுப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

01.04.2020 முதல் உயர்வு செய்யப்பட்டது

| கடை எண் | குத்தகைதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15ரூ உயர்வு வாடகை | தற்போது 01.04.2003 முதல் வாடகை |
|---|---|---|---|---|
| 067/2 | திரு.ரவிச்சந்திரன் | 3577.00 | 537 | 4114.00 |
| 067/3 | திரு.ஞ.ஆ ஆண்டனி | 3558.00 | 534 | 4092.00 |
| 067/4 | திரு.ஞ.மு சசிதரன் | 3594.00 | 539 | 4133.00 |
| 067/5 | திரு.சாகுல் அமீது | 3577.00 | 537 | 4114.00 |
| 067/6 | திரு.ஏ.ஆ தோமஸ் | 3594.00 | 539 | 4133.00 |
| 067/7 | திரு.சுரேஸ்குமார் | 3594.00 | 539 | 4133.00 |
| 067/8 | திரு.செய்தலவி | 3782.00 | 567 | 4349.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 067/9 | திரு.இளையபெருமால் | 3611.00 | 542 | 4153.00 |
| 067/10 | திரு.முகமது ஹனீபா | 3636.00 | 545 | 4181.00 |
| 067/11 | திரு.அஷ்ரப் | 2870.00 | 431 | 3301.00 |
| 067/12 | திரு.சிவசுப்பிரமணியம் | 2243.00 | 336 | 2579.00 |
| 067/13 | திரு.மு.முகமது | 1187.00 | 178 | 1368.00 |
| 067/14 | திரு.யோகேஸ்வரன் | 988.00 | 148 | 1136.00 |
| 067/15 | திரு.சிவராஜ் | 397.00 | 60 | 457.00 |
| 067/16 | திரு.கண்ணதாசன் | 2966.00 | 445 | 3411.00 |

தேவாலா வணிக வளாகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 067/20 | திரு.ஆறுமுகராஜா | 2531.00 | 380 | 2911.00 |
| 067/21 | திரு.ஆறுமுகராஜா | 1055.00 | 158 | 1213.00 |
| 067/23 | திருமதி.நித்தியகல்யாணி | 781.00 | 117 | 898.00 |
| 067/24 | திரு.ஆன்டணி போலோ | 528.00 | 79 | 607.00 |

புதிய பேருந்து நிலைய வணிக வளாகம்:

| | | | | |
|---|---|---|---|---|
| 067/30 | திரு.அருண் | 4715.00 | 707 | 5422.00 |
| 067/31 | திரு.மூர்த்தி | 5865.00 | 880 | 6745.00 |
| 067/32 | திருமதி.மு.ஜெயலட்சுமி | 3565.00 | 535 | 4100.00 |
| 067/04 | திரு.ஹாரீஸ் | 3565.00 | 535 | 4100.00 |
| 067/35 | திரு.ஹாரீஸ் த/பெ குஞ்சுமுகமது | 3565.00 | 535 | 4100.00 |
| 067/36 | திரு.முகமது ஜபருள்ள | 3565.00 | 535 | 4100.00 |
| 067/39 | திரு.தியாகராஜன் | 3623.00 | 543 | 4166.00 |
| 067/40 | திருமதி.ஷீஜா | 4945.00 | 742 | 5687.00 |
| 067/41 | திருமதி.சுஜாதா | 4773.00 | 716 | 5489.00 |
| 067/43 | திரு.சாய் கார்த்திகேயன் | 3623.00 | 543 | 4166.00 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண். 79 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது</u>

**பொருள் எண்.5**

அரசானை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007 இன்படி நெல்லியாளம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண்.42 அதன் குத்தகைதாரர் திரு.ராஜீ S/o போரன் 16/211A செம்மன்வயல் மேங்கோரேஞ்ச் தனது குடும்ப சூல்நிலைக் காரணமாக வியாபாரத்தை தொடர இயலாத நிலையில் உள்ளதால் அதனை நகராட்சிக்கு திரும்ப ஒப்படைத்துள்ளார். எனவே கடை எண்.42. புதிதாக ஏலம் போடுவதற்கு தற்போதுள்ள வாடகை ரூ. 4773/-. +18%GST க்கு குறையாமல் ஏலம் போடுவதற்க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகை விபரம் | முன் வைப்புத் தொகை |
|---|---|---|
| 1 | கடை எண்.42 | ரூ. 1,00,000/– |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 80 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.6**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட ஏலமன்னா குறும்பர் பாடி செல்லும் சாலையானது மழையினால் பழுதடைந்து வாகனங்கள் செல்லாதவாறு உள்ளதால், அப்பகுதி மக்கள் இப்பணியினை உடனே சீர் செய்யுமாறு புகார் வந்த வண்ணம் உள்ளது. ஆகவே இப்பணிக்கு ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியத்தினை கருதி பணி மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஏலமன்னா குறும்பர் படி சாலை இண்டர்லாக் பேவர் பிளாக் சாலையாக மேம்பாடு செய்தல் | ரூ.10.00 |

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 81 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.7**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் இரண்டு வாகனங்களை இயக்க இரண்டு ஓட்டுநர்கள் வெளிக்கொணர்வின் அடிப்படையில் திரு. பிஜு மூலம் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி, ஓட்டுநர்களை பணிக்கு அனுப்பும் காலம் 30.11.2022–ல் முடிவடைகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மறு உத்தரவு வரும் வரை மேற்படி, ஓட்டுநர்களை பணிக்கு அனுப்பும் காலத்தை பொதுசுகாதார பணியின் அத்தியா அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், வாகனத்தை இயக்குதல் காரணமாகவும், டிசம்பர் 2022, ஜனவரி 2023 மற்றும் பிப்ரவரி 2023 ஆகிய மூன்று மாதத்திற்கு நீட்டிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 82 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.8**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பணிகளுக்கு 10 நிரந்தர தூய்மைப் பணியாளர்களுக்கான பணியிடம் ஒதுக்கீடு செய்ததில் 1 பணியிடம் 9 தூய்மை பணியாளர்களைக் கொண்டு பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள இயலாத சூழ்நிலையால் நகராட்சி உள்ளதை கருத்தில் கொண்டு, ஏற்கனவே வெளிக்கொணர்வின் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளர்களை பணிக்கு அனுப்பும் M/S Atchaya Associates Gudalur-ன் பணிக்காலத்தை பணிக்கால நீட்டிப்பு 30.11.2022 இல் முடிவடைவதால் டிசம்பர் 2022, ஜனவரி 2023 மற்றும் பிப்ரவரி 2023 ஆகிய மூன்று மாதத்திற்கு நீட்டிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 83 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.9**

நெல்லியாளம் நகராட்சிக்கு உட்பட்ட உப்பட்டி பஜாரில் உள்ள நகராட்சி உள்ள கழிப்பிடம், கழிவு நீர் தொட்டி நிரம்பி உள்ளதால் அதனை சரிசெய்ய உத்தேச செலவுத்தொகை ரூ.65,000/- அனுமதி வழங்க நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இப்பணியானது மிகவும் அவசரம் என்பதால் பொதுமக்கள் நலன் கருதி உடனே செய்ய வேண்டிய சூழ்நிலை என்பதால் இப்பணிக்கு முன்அனுமதி மற்றும் அனுமதி வழங்குமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.84 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்.10**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.யு3/1107/2022, நாள்.06.01.2022-ல் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் வட்டம், நெல்லியாளம் கிராமம் 1, பந்தலூர் வியைாளட்டு மைதானம் செல்லும் சாலையில் உள்ள இடம் புல எண் 2298 காலையில் 0.51.50 ஹெக்டேர் நிலம் “கிராமம் மேய்ச்சல் தரை” என்ற வகைப்பாடு கொண்ட நிலத்தில் தினசரி சந்தை அமைக்க நில உரிமை மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது, மேற்படி அருகாமையில் உள்ள புல எண் 2297/7-ற்கு வழிகாட்டி மதிப்பு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.470000/- என உள்ளது. எனவே வழிகாட்டி பதிவேட்டினைவிட சந்தை மதிப்பு அதிகமாக உள்ளதால் மேற்படி நிலம் 0.51.50 ஹெக்டேர் நிலத்தின் மதிப்பு ரூ.5981056/- ஆகும்.

எனவே நில உரிமை மாற்றம் தொகை மற்றும் காலையினை மேம்படுத்தும் பொருட்டு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.6000/- என்ற விகிதம் பராமரிப்பு கட்டணம் (0.15.50 ஹெக்டேர் = 1.27 ஏக்கர்) நிலத்திற்கு ரூ.7620/- = 5988676/- இத்தொகை செலுத்துவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 85 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**இத்தொகையை சிறப்பு நிதியாகப் பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.**

**<u>பொருள் எண்.11</u>**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பொது மக்களிடமிருந்து அன்றாடம் பெறப்படும் குடிநீர் விநியோகம் தொடர்பான புகார்களுக்கு தற்காலிக தீர்வாக கருதி வாடகைக்கு Tanker Lorry எடுத்து அதன் மூலம் தேவையான இடங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும், மேலும் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கிணறுகளில் குடிநீரின் அளவு வறட்சி காரணமாக குறைந்து விடுவதால், பொதுமக்களுக்கு போதுமான குடிநீர் வழங்க இயலாத சூழ்நிலை உள்ளதை கருத்தில் கொண்டும், குடிநீர் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருத்தில் கொண்டும் Tanker Lorry மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.15.00 இலட்சத்திற்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

***<u>அலுவலக குறிப்பு</u>***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**<u>தீர்மானம் எண். 86 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண்.12</u>**

நெல்லியாளம் நகராட்சியில் தற்போது தேவாலா ஏரோடு, நீர்மட்டம் மற்றும் சோலமலை ஆகிய மூன்று இடங்களில் உள்ள தடுப்பணை மூலமாகவும், 103 எண்ணிக்கை திறந்த வெளிக்கிணறுகளில் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டும் நேரிடையாக 4.10 எம்.எல்.டி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி 103 எண்ணிக்கை திறந்தவெளி கிணறுகளில் 10 எண்ணிக்கை அடர்ந்த வனத்துறை சார்ந்ததால் மின்இணைப்பு இல்லாமல் டீசல் என்ஜின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இந்நகராட்சியில் குடிநீர் சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வறட்சி காலங்களில் வாரம் இரண்டு முறை அல்லது ஒரு முறை நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு 42 லிட்டர் வீதம் விநியோகம் செய்யப்படுகிறது. பெரும்பாலான திறந்தவெளி கிணறுகள் வறட்சி காலங்களில் குடிநீர் வற்றுவதால், வாடகை லாரி மூலமாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது நகராட்சியில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 38512 மக்களுக்கு மட்டுமே குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள மக்கள் அடர்ந்த வனப்பகுதியில் உள்ள நீர்ஆதாரத்தை பயன்படுத்துகிறார்கள்.

வறட்சி காலங்களில் அதாவது பிப்ரவரி 15 , மாார்ச்சு, ஏப்ரல் மற்றும் மே 15 வரையில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதால், ஒவ்வொரு ஆண்டும் வாடகைக்கு டேங்கர் லாரி எடுக்கப்பட்டு, 10 ஆண்டு காலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான செலவினம் ஒவ்வொரு ஆண்டும் ரூ.20.00 இலட்சம் முதல் ரூ.30.00 இலட்சம் வரை செலவாகிறது. இச்செலவினத்தை கட்டுப்படுத்த நகராட்சிக்கு சொந்தமாக 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய குடிநீர் வாகனம் வாங்க ரூ.30.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை வருவாய் நிதி அல்லது ஏதேனும் திட்ட நிதி கிடைக்கும் பட்சத்தில் இப்பணியினை மேற்கொ ண்டு டேங்கர் லாரி வாங்க நிர்வாக அனுமதி வழங்குமாறு கருத்துருவானது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

***<u>அலுவலக குறிப்பு</u>***

*மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**<u>தீர்மானம் எண்.87 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது</u>**

**பொருள் எண்.13**

நெல்லியாளம் நகராட்சியின் 2023–2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது

***அலுவலக குறிப்பு***

*மன்றம் பதிவு செய்யலாம்.*

**தீர்மானம் எண். 88 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொது தீர்மானம்**

நெல்லியாளம் நகராட்சியில் ஆணையாளராக திருமதி.மகேஸ்வரி அவர்கள் நகராட்சியில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்வதில் மெத்தனம் காட்டுவதோடு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள எந்தவொரு முயற்சியையும் எடுக்காததாலும் அவருக்கு 5% கமிஷன் வேண்டும் என்று எந்தவொரு ஆவணங்களிலும் கையெழுத்து இடாமல் தாமதிப்பதால் இதனால் அரசுக்கு அவப்பெயர் ஏற்படும் நிலை இருப்பதால் இவரை தறகாலிகமாக நீக்கம் செய்து தற்காலிகமாக பணியிடை மாற்றம் செய்ய வேண்டுகிறோம். உடனடியாக அவரை பணியிடை மாற்றம் செய்யாவிட்டால் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சாலையில் அமர்ந்து போராட்டம் நடத்தப்படும் என்று நகரமன்ற கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரும் தெரிவித்துள்ளனர்.

**தீர்மானம் எண்.89 /2023, நாள்.06.03.2023**

**பொருள் எண்.14**

பொருள் : தூய்மை பாரத திட்டம் 2.0 – நெல்லியாளம் நகராட்சி – 2022– 2023 Used Water Management Component of SBM(U) 2.0 திட்டத்தின் கீழ் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட ஏலமன்னா குப்பை கிடங்கில் FSTP மற்றும் STP திட்டம் மூலமாக கழிவு நீர் மறு சுழற்சி செய்து விவசாய நிலங்களுக்கு உபயோகப்படுத்தும் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது - தொடர்பாக.

பார்வை : நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்.9192/2022/SBM-1 நாள்.15.03.2023.

*****

நெல்லியாளம் நகராட்சிக்கு 2022– 2023 ஆம் ஆண்டிற்கு Used Water Management Component of SBM(U) 2.0 திட்டத்தின் கீழ் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட ஏலமன்னா குப்பை கிடங்கில் FSTP மற்றும் STP திட்டம் மூலமாக கழிவு நீர் மறு சுழற்சி செய்து விவசாய நிலங்களுக்கு உபயோகப்படுத்தும் திட்டத்திற்கு பார்வையில் காணும் செயல்முறை உத்திரவின் வாயிலாக கீழ்காணும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | Funding Pattern | | |
|---|---|---|---|---|---|
| | | | GOI 50% | State 33% | ULB 17% |
| 1) | மலக்கழிவு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய தளம் அமைத்தல் (10kld) | 387.00 | 193.50 | 127.71 | 65.79 |

ஆகவே மேற்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு , நகராட்சி பங்களிப்பான **65.79** இலட்சத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

***அலுவலக குறிப்பு***

*மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 90 /2023, நாள்.06.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

ஒப்பம்

**(திருமதி. சி.சிவகாமி.,)**

நகர்மன்ற தலைவர்,

நெல்லியாளம் நகராட்சி.

**// உண்மை நகல் //**

ஆணையாளர்,

நெல்லியாளம் நகராட்சி.

**நெல்லியாளம் நகர்மன்றத்தின் அவசர கூட்டம் 30.03.2023 ஆம் தேதி காலை வியாழக்கிழமை 11.00 மணிக்கு இந்நகராட்சியின் நகர்மன்றக் கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகளின் விவரம்.**

**நகர்மன்ற தலைவர்,**
**நெல்லியாளம் நகராட்சி**

**பொருள் எண்.1**

நெல்லியாளம் நகராட்சிக்கு சொந்தமான பந்தலூர் புதிய பேருந்து நிலைய வணிக வளாக கடை எண்.42 மற்றும் நாடுகாணி பஜார் கட்டண கழிப்பிடம் ஆகியவற்றிற்கு 21.03.2023 அன்று மறு ஏலம் நடத்தப்பட்டது.

| கடை எண் | வணிக வளாக கடைக்கு நடைபெற்ற ஏலத்தில் கலந்துக் கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | |
|---|---|---|
| 067/42 | திரு.தீபக்ராம் | ரூ.4750/– |
| | திரு.சதிஸ்குமார் | ரூ.4200/– |
| | நாடுகாணி பஜார் கட்டண கழிப்பிடம் | ஏலம் கோர யாரும் முன்வரவில்லை |

இதில் அதிகபட்ச ஏலத் தொகை கோரியுள்ள திரு.தீபக்ராம் அவர்களின் ஏலக் கேள்வியான மாதம் ரூ.4750/– வாடகைக்கு குத்தகைக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

நாடுகாணி பஜார் கட்டண கழிப்பிடத்திற்கு ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை என்பதால் மறு ஏலம் கோரப்படுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மானம் எண். 91 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.2**

நெல்லியாளம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள கடை எண்.42, மற்றும் பந்தலூர் பஜார் கட்டண கழிப்பிடம், பந்தலூர் புதிய பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம், நாடுகாணி பஜார் கட்டண கழிப்பிடம் ஆகியவைக்கு 16.03.2023 அன்று பொது ஏலம் நடத்தப்பட்டது.

| வ. எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் ஏலத்தொகை | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பந்தலூர் பஜார் கட்டண கழிப்பிடம் | திரு.தேவேந்திரன் | ரூ.8850/– | திருமதி.வள்ளி | ரூ.8820/– |
| 2 | பந்தலூர் புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் | திருமதி.வள்ளி | ரூ.2700/– | திரு.தேவேந்திரன் | ரூ.2600/– |
| 3 | நாடுகாணி பஜார் கட்டண கழிப்பிடம் | ஏலம் கோர யாரும் முன்வரவில்லை | | | |
| 4 | புதிய பேருந்து நிலைய கடை எண்.42 | ஏலம் கோர யாரும் முன்வரவில்லை | | | |

மேற்படி அதிகபட்ச ஏலத் தொகை கோரியுள்ளவர்களில் திரு.தேவேந்திரன் பந்தலூர் பஜார் கட்டண கழிப்பிடத்திற்கு கோரியுள்ள ஏலக்கேள்வி ரூ.8850/– அதிகபட்ச கேள்வியாக இருப்பதால் அதனை ஏற்கலாம்.

மேலும் பந்தலூர் புதிய பேருந்து நிலைய கட்டணக் கழிப்பிடத்திற்கு திருமதி.வள்ளி கோரியுள்ள அதிகபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.2700/– ஐ ஏற்கலாம்.

நாடுகாணி பஜார் கட்டண கழிப்பிடத்திற்கு ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை, புதிய பேருந்து நிலைய வளாக கடை எண்.42–க்கும் ஏலம் கோர ஒருவரும் முன் வராததால் மேற்கண்ட இரண்டுக்கும் மறு ஏலம் கோரலாம்.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 92 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.3**

2021–2022ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் ( MLACDS) நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 இந்திரன் வீட்டிலிருந்து ரமேஷ் வீடுவரை தடுப்பு சுவருடன் நடைபாதை அமைத்தல் ரூ.5.00 இலட்சத்திற்கு 16.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. அகமது, ஒப்பந்ததாரர் | 3.82 % அதிகம் |
| 2 | திருமதி.பார்வதி, ஒப்பந்ததாரர் | 0.04 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.பார்வதி, ஒப்பந்ததாரர் என்பவர் 0.04% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் திட்டப்பணி என்பதால் பணி உத்திரவு வழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 93 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.4**

2022–2023ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் நெல்லியாளம் நகராட்சிக்கு குடிநீர் உதிரிபாகங்கள் வாங்குதல் ரூ.5.00 இலட்சத்திற்கு 03.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. செய்தலவி, ஒப்பந்ததாரர் | 0.30 % அதிகம் |
| 2 | திரு.அசீஸ், ஒப்பந்ததாரர் | 0.18 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.அசீஸ், ஒப்பந்ததாரர் என்பவர் 0.18% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 94 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.5**

2022–2023ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் நெல்லியாளம் நகராட்சியில் குடிநீர் விநியோக மோட்டார்களுக்கு ஸ்டாட்டர்கள் மற்றும் ஸ்டாட்டர் உதிரிபாகங்கள் வாங்குதல் ரூ.4.75 இலட்சத்திற்கு 03.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. குமார், ஒப்பந்ததாரர் | 3.94 % அதிகம் |
| 2 | திரு. சந்திரசேகரன், ஒப்பந்ததாரர் | 0.14 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சந்திரசேகரன், ஒப்பந்ததாரர் என்பவர் 0.14% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 95 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.6**

2022–2023ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் நெல்லியாளம் நகராட்சிக்கு புதியதாக மின் மோட்டார் வாங்குதல் ரூ.7.50 இலட்சத்திற்கு 03.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. செய்தலவி, ஒப்பந்ததாரர் | 0.46 % குறைவு |
| 2 | திரு. தெய்வேந்திரன், ஒப்பந்ததாரர் | 0.05 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.செய்தலவி, ஒப்பந்ததாரர் என்பவர் 0.46% மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணி உத்திரவு வழங்க நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 96 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.7**

*நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட நாடுகாணி பொன்னூர் 10hp மோட்டார் பழுதடைதுள்ளதை, ஆய்வு செய்யப்பட்டது. நாடுகாணி பொன்னூர் மோட்டார் Rewinding செய்து மற்றும் Panel Board பழுது பணி மேற்கொண்டு திரும்பவும் அப்பகுதியில் Erection செய்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.39000/–திற்க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இப்பணி முடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே இப்பணிக்கான பட்டியல் தொகை ரூ.38206/–ஐ M/s.Rahiman Electricals works அவர்களுக்கு வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

**அலுவலக குறிப்பு**

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 97 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.8**

*நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் அட்டி 10hp மோட்டார் பழுதடைதுள்ளதை, ஆய்வு செய்யப்பட்டது. பந்தலூர் மோட்டார் Rewinding செய்து மற்றும் Panel Board பழுது பணி மேற்கொண்டு திரும்பவும் அப்பகுதியில் Erection செய்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.27000/–திற்க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இப்பணி முடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே இப்பணிக்கான பட்டியல் தொகை ரூ.26430–ஐ M/s.Rahiman Electricals works அவர்களுக்கு வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 98 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.9**

*நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் பாறக்கல் 7.5hp மோட்டார் பழுதடைதுள்ளதை, ஆய்வு செய்யப்பட்டது. பந்தலூர் பாறக்கல் Rewinding செய்து மற்றும் Panel Board பழுது பணி மேற்கொண்டு திரும்பவும் அப்பகுதியில் Erection செய்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.31000/–திற்க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இப்பணி முடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே இப்பணிக்கான பட்டியல் தொகை ரூ.30040/–ஐ M/s.Rahiman Electricals works அவர்களுக்கு வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 99 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.10**

*நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட தொண்டியாளம் 10hp மோட்டார் பழுதடைதுள்ளதை, ஆய்வு செய்யப்பட்டது. தொண்டியாளம் Rewinding செய்து மற்றும் Panel Board பழுது பணி மேற்கொண்டு திரும்பவும் அப்பகுதியில் Erection செய்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.32000/–திற்க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இப்பணி முடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே இப்பணிக்கான பட்டியல் தொகை ரூ.31700/–ஐ M/s.Rahiman Electricals works அவர்களுக்கு வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 100 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.11**

*நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட சோலமலை 10hp மோட்டார் பழுதடைதுள்ளதை, ஆய்வு செய்யப்பட்டது. சோலமலை Rewinding செய்து மற்றும் Panel Board பழுது பணி மேற்கொண்டு திரும்பவும் அப்பகுதியில் Erection செய்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.34000/—திற்க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இப்பணி முடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே இப்பணிக்கான பட்டியல் தொகை ரூ.33740/—ஐ M/s.Rahiman Electricals works அவர்களுக்கு வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 101 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.12**

*நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட அமபலக்கெல்லி பகுதியில் உள்ள குடிநீர் தேக்கத்தொட்டி 25 வருடத்திற்கு முன்னர் அமைக்கப்பட்டடு, சிறு சிறு பழுதுகள் பார்க்கப்பட்டு உபயோக படுத்தப்பட்டு வந்தது. தற்போது முற்றிலும் பழுதாகி உள்ளதால் தண்ணீர் தேக்கி வைக்க முடியாத நிலை உள்ளதால், குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை உள்ளது. இப்பகுதிக்கு புதியதாக Syntex அமைத்து, குடிநீர் விநியோகம் செய்ய Syntex tank மற்றும் மேடை அமைக்க ரூ.50000/—த்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுநிதியின் கீழ் பணி மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 102 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.13**

*நெல்லியாளம் நகராட்சி பொறியாளர் அறை மற்றும் பொறியியல் பிரிவு கதவு மற்றும் விளக்குகள் பொருத்தவும், இருக்கைகள் வாங்கவும் ரூ.90000/—த்திறகு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுநிதியின் கீழ் பணி மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 103 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.14**

*நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் காலனியில் தரைமட்டத்திலேயே ஏற்கனவே அமைந்துள்ள Syntex இருப்பதால், சற்று உயரப்படுத்தி விநியோகம் செய்ய ஏதுவாக இருக்கும் எனவும், கீழ்மட்டத்தில் உள்ள பகுதிகளுக்கு மட்டுமே குடிநீர் செல்கிறது. மட்டமான இடத்திற்கு செல்லாத காரணத்தால் சற்று உயர்த்தி Syntex மேடை அமைக்கவும், உப்பட்டிப்பகுதியில் கால்வாய் மேற்தளம் Slab உடைந்துள்ளதால், மக்கள் நடைபாதையாக செல்ல முடியாத நிலை உள்ளதாலும், இவ்விரண்டு பணிகளும் மேற்கொள்ள ரூ.1.25 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுநிதியின் கீழ் பணி மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 104 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.15**

*நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட கோட்டக்குன்னு 7.5hp மோட்டார் பழுதடைதுள்ளதை, ஆய்வு செய்யப்பட்டது. கோட்டக்குன்னு Rewinding செய்து மற்றும் Panel Board பழுது பணி மேற்கொண்டு திரும்பவும் அப்பகுதியில் Erection செய்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.21000/—திற்க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இப்பணி முடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே இப்பணிக்கான பட்டியல் தொகை ரூ.20866/—ஐ M/s.Rahiman Electricals works அவர்களுக்கு வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 105 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.16**

*நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட கூமூலா 10hp மோட்டார் பழுதடைதுள்ளதை, ஆய்வு செய்யப்பட்டது. கூமூலா Rewinding செய்து மற்றும் Panel Board பழுது பணி மேற்கொண்டு திரும்பவும் அப்பகுதியில் Erection செய்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.27000/—திற்க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இப்பணி முடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே இப்பணிக்கான பட்டியல் தொகை ரூ.26430/—ஐ M/s.Rahiman Electricals works அவர்களுக்கு வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 106 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.17**

*நெல்லியாளம் நகராட்சியில் உப்பட்டி பஜார் பகுதியில் பொதுமக்கள் அதிகம் வந்து செல்லும் இடத்தில் கழிப்பறை பயன்படுத்தமுடியா வண்ணம் உள்ளது. இக்கழிவறையை சீரமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

| | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1) | உப்பட்டி பஜார் பொது கழிப்பிடம் சீரமைப்பு செய்தல் | 2.00 |

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 107/2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.18**

*நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட நாடுகாணி பகுதியில் உள்ள பொதுகழிப்பிடத்தில் உள்ள கதவுகள் மற்றும் கழிவறை வளாகம் சேதம் அடைந்துள்ளதால், ஊட்டிக்கு செல்லும் சுற்றுலா பயணிகள் இவ்வழியாக செல்லும் போது இக்கழிவறையினை பயன்படுத்தி வருகிறார்கள். எனவே சேதம் அடைந்த கழிவறைகளை சீரமைத்து சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வண்ணம் கொண்டுவர இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1) | நாடுகாணி பஜார் 21 ஆம் வார்டில் பொது கழிப்பிடம் சீரமைப்பு செய்தல் | 1.50 |

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 108 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.19**

பொருள் : பணிகள் - காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் – 1முதல் 5ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டம் – உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்துதல் – இடம் தேர்வு செய்து பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது– தொடர்பாக.

பார்வை :
1) சமூல நலன் மற்றும் மகளிர் உரிமை (சந4–1) துறை அரசாணை (நிலை ) எண்.43 நாள்.27.07.2022
2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.17404/2022/எம்–1 நாள்.10.03.2023

*****

பார்வை(1)இல் காணும் காணும் அரசாணை மற்றும் பார்வை(2)இல் காணும் கடிதத்தில் நெல்லியாளம் நகராட்சிக்கு கீழ்காணும் பணிகளுக்கான இடம் தேர்வு செய்து பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் (ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைத்தல் )**

| வ.எண் | விபரம் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1) | அத்திக்குன்னா ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ஒருங்கிணைந்த சமயற்கூடம் அமைத்தல் | 32.50 |
| 2) | தேவாலா ரவுஸ்டன்முல்லை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஒருங்கிணைந்த சமய்கூடம் அமைத்தல் | 32.50 |

ஆகவே மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கப்பட்டது நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும்

***அலுவலக குறிப்பு***

*மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண்.109 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.20**

*நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் முயைான கால்வாய் இல்லாததால் கழிவுநீர்கள் சாலையிலேயே தேங்கி நிற்பதால் மக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாகவும், சுகாதார கேடு உள்ளதால் இவ்விடத்தில் சேம்பர் கட்டி PVC குழாய் மூலம் கழிவு நீர் கொண்டு செல்ல ரூ.1.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 110 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.21**

*நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட அத்திக்குன்னா பகுதியில் உள்ள மசினியம்மன் கோவில் அருகில் சிமெண்ட் காங்கிரீட் நடைபாதை மற்றும் கால்வாய் அமைக்க ரூ.2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 111 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.22**

பார்வை– நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் ஒதுக்கீடு படிவம் மின்னஞ்சலில் பெறப்பட்ட நாள்.10.02.2023

***** ******

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒதுக்கீடு படிவத்திற்கிணங்க, நெல்லியாளம் நகராட்சியில் Damaged Roads Under பொது நிதி திடடம் 2022–2023 ஆம் ஆண்டிற்கு 2016–2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் அமைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட சாலை பணிகளை மேற்கொள்ள பொது நிதி 2022–2023 ஆம் ஆண்டிற்க்கு ரூ.190.00 இலட்சத்திற்கு நிதியானது இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆகவே கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொது நிதி திட்டம் 2022–2023**

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1) | பொன்னானி முதல் குன்றில்கடவு வரை உள்ள சிமெண்ட் சாலையினை மேம்படுத்தி சீரமைத்தல் (067003L044) | 12.00 |
| 2) | கண்ணடியன் பாடி முதல் சேலக்குன்னா வரை உள்ள தார் சாலையினை சீரமைத்தல் (0670011R058) | 20.00 |
| 3) | மாணிக்கம் வீடு முதல் லிங்கம் வீடு வரை உள்ள கால்வாய் மற்றும் நடைபாதையினை சீரமைத்தல் | 6.00 |
| 4) | வாழவயல் வேலாயுதம் வீட்டின் அருகாமையில் நடைபாதை மற்றும் கால்வாய் சீரமைத்தல் | 7.00 |
| 5) | தேவாலா அட்டியில் உள்ள நகராட்சி கிணறு அருகாமையில் நடைபாதை பராமரித்தல் | 10.00 |
| 6) | வார்டு எண்.16 இல் ராமர் கடை முதல் நகராட்சி கிணறு வரை உள்ள | 7.00 |

| | | |
|---|---|---|
| | நடைபாதை சீர்செய்யும் பணி | |
| 7) | தேவாலா காவல் நிலையத்திற்கு இடதுபுறம் உள்ள சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை மேம்பாடு செய்தல் | 10.00 |
| 8) | காட்டிமட்டத்தில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை சீரமைத்தல் | 9.00 |
| 9) | பொன்னூர் கடை அருகில் உள்ள நடைபாதை சீரமைத்தல் | 8.00 |
| 10) | கீழ்நாடுகாணி எஸ்.சி காலனி சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை சீரமைத்தல் | 10.00 |
| 11) | ஏலமன்னா பெருங்கரை கல்கடவு எஸ்.டி காலனி சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை சீரமைத்தல் | 15.00 |
| 12) | நாரங்காவயல் அருகில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் நடைப்பாதை சீரமைத்தல் | 7.00 |
| 13) | கூமூலா எஸ்.டி காலனி தார் சாலை சீரமைத்தல் | 25.00 |
| 14) | இந்திராநகர் பகுதியின் இடபுறமாக சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை சீரமைத்தல் | 10.0 |
| 15) | பந்தலூர் அட்டி பகுதியில் உள்ள பெட்டிகடை முதல் வினோத் வீடுவரை சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை சீரமைத்தல் | 8.00 |
| 16) | கீழ்நாடுகாணியில் கால்வாய் மற்றும் சிமெண்ட் காங்கிரீட் சாலை 1 சீரமைத்தல் | 8.00 |
| 17) | புளியம்பாறையில் சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை சீரமைத்தல் | 11.00 |
| 18) | மாணிக்கம் வீடு முதல் ஜெகநாதன் வீடு வரை சிமெண்ட் கான்கிரீட் சாலையினை சீரமைத்தல் | 7.00 |
| | **மொத்தம்** | **190.00** |

*அலுவலக குறிப்பு*

*மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 112 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.23**

பார்வை– ஊர்பொதுமக்கள் , இந்திராநகர் அவர்களின் விண்ணப்பம் நாள்.13.03.2023

***** ****

*பார்வையில் காணும் பொதுமக்களின் மனுவினை தொடர்ந்து, இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. இந்திராநகரில் பகுதியில் கழிவுநீர் தேங்கி நிற்பதை இப்பகுதியில் இருந்து அப்புறப்படுத்த 5 எண்ணிக்கை Chamer மற்றும் 300mm PVC Pipe அமைத்து கழிவுநீர் வடிகாலுடன் இணைக்கும் பணிக்கு ரூ.1.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

*அலுவலக குறிப்பு*

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 113 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.24</u>**

பார்வை– திருமதி.சன்மதி, வாழக்கொல்லி, தேவாலா என்பவரது இணையதள STF மனு எண்.4699010

***** ****

*பார்வையில் காணும் மனுவினை தொடர்ந்து, நெல்லியாளம் நகராட்சி தேவாலா, வாழக்கொல்லி பகுதியில் சமுதாய கூடம் மற்றும் பொதுக்கழிப்பிடம் பார்வையிடப்பட்டது. தற்போது இதனை பழங்குடியின மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே தேவாலா வாழக்கெல்லி பகுதியில் உள்ள சமுதாயகூடம் மற்றும் பொதுக்கழிப்பிடத்தை சீரமைக்க ரூ.500000/– இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பொதுநிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***<u>அலுவலக குறிப்பு</u>***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**<u>தீர்மானம் எண். 114 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது</u>**

**<u>பொருள் எண்.25</u>**

நெல்லியாளம் நகராட்சியானது பேரூராட்சியிலிருந்து 2004 ஆம் ஆண்டு நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அவ்வாறு தரம் உயர்த்தும் போது பேரூராட்சி பராமரிப்பில் இருந்த சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், குடிநீர் நீர்தேக்கத்தொட்டிகள், கிணறுகள், குடிநீர் தெருகுழாய்கள் மற்றும் அலுவலக கட்டிடங்கள் என பேரூராட்சி பராமரிப்பில் இருந்து வந்த அனைத்து அசையும் அசையா சொத்துகள் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. ஆனால் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வந்திருந்த 12 துவக்கப்பள்ளிகள் மற்றும் 5 நடுநிலைப்பள்ளிகள் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்படவில்லை. அவை இன்னும் ஊராட்சி ஒன்றியம் , கூடலூர் அவர்களின் பராமரிப்பில் இருந்து வருகிறது.

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டம் செயல்படுத்த நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய பள்ளிகளை நகராட்சி வசம் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண். | பள்ளியின் பெயர் |
|---|---|
| 1 | அத்திக்குன்னா ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி |
| 2 | பந்தலூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி |
| 3 | புஞ்சவயல் உப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி |
| 4 | சேலக்குன்னா ஊராட்சி ஒன்றிய துவக்கப்ள்ளி |
| 5 | ஏலமன்னா ஜி.டி.ஆர் துவக்கப்பள்ளி |
| 6 | மேங்கோரேஞ் மேற்கு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி |
| 7 | குன்றில்கடவு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி |
| 8 | கூமூலா ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி |
| 9 | மேங்கோரஞ் கிழக்கு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி |
| 10 | தேவாலா ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி |
| 11 | தேவாலா செத்தக்கொல்லி அரசு துவக்கப்பள்ளி |
| 12 | தேவாலா அட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்ள்ளி |

| | |
|---|---|
| 13 | பொன்னூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி |
| 14 | புளியம்பாறை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி |
| 15 | பாண்டியார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி |
| 16 | கீழ்நாடுகாணி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி |
| 17 | வாழவயல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி |

மேற்காணும் பள்ளிகளை ஒப்படைக்கும் பட்சத்தில் பள்ளி கட்டிட மேம்பாடு மற்றும் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள இயலும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துவக்கப்பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் நகராட்சியால் செயல்படுத்த இயலும். எனவே இப் 17 பள்ளிகளை நெல்லியாளம் நகராட்சி வசம் ஒப்படைக்கவும் மேலும் நகராட்சிமூலம் பராமரித்து கொள்ளவும் அதற்கான உரிய கருத்துருவினை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிட நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) நகர்மன்றம் அனுமதி அளிக்கலாம்

ஆ) மேற்கண்ட பள்ளியினை உரிய அனுமதியுடன் நகராட்சியின்
மூலம் பராமரித்திடவும் மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண். 115 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது</u>**

**<u>பொருள் எண்.26</u>**

நெல்லியாளம் நகராட்சியில் 2023–24, 2024-2025, 2025-2026 மற்றும் 2026-2027 முடிய கீழ்கண்ட செலவினங்களை மேற்கொள்ள ஆணையருக்கு அதிகாரம் (Delegation) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இந்நகர்மன்ற உறுப்பினர்களுக்கு பிரதி மாதம் அமர்வு கட்டணம் வழங்குதல், அரசால் மேற்கொள்ளப்படும் கோடைவிழா, குடியரசு தின விழா, சுதந்திர தின விழா, பொருட்கண்காட்சி, தாவர பூங்கா கண்காட்சி இது போன்ற அரசு விழாக்களுக்கு செலவிடுதல் இந்நகராட்சி அலுவலகத்தில் மேஜை, நாற்காலி Furniture-கள் மற்றும் அலுவலக வளாகத்தில் சிறு சிறு பழுதுகள் நீக்கம் செய்ய விலைப்புள்ளிகள் பெற்று அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, அலுவலர்களுக்கு தணிக்கை ஊதியம் வழங்குதல், இவ்வலுவலக ஆண்டு கணக்கு முடிக்கும் நிறுவனத்திற்கு கட்டணம் வழங்குதல், வருமான வரி, GST Filling செய்வதற்கு கட்டணம் வழங்குதல் அனைத்து வகையான (Stationarys) அலுவலக எழுதுபொருட்கள் வாங்கவும், கணினிகள் மற்றும் Tonner-கள், பிரின்டர்கள் வாங்கவும், பழுதுகள் நீக்கவும், அம்மா உணவகத்தில் சிறு சிறு பழுது பார்த்தல், அம்மா உணவகத்தில் வசூலிக்கப்படும் கட்டணத்திற்கு டோக்கன் அச்சிடுதல், அம்மா உணவகத்திற்கு மளிகை பொருட்கள், காய்கறிகள் வாங்குவதற்கு மற்றும் கணினிக்கு தேவையான Printer மற்றும் Tonner வாங்குவதற்கு செலவிடுதல். நகராட்சி வாகனங்களுக்கான பழுதுகள் சரிபார்க்கும் கட்டணம் வழங்குதல்.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 116 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது</u>**

**<u>பொருள் எண்.27</u>**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட நெல்லியாளம் கிராமம் புல எண் 2287/4 ல் இந்திராநகரில் ஆக்கிரமிப்பு மனைகளை வரன்முறைப்படுத்தி இரண்டு நபர்களுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டா தலா 3.00 சென்ட் நிலம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 117 /2023, நாள்.30.03.2023 / ஆய்வு செய்ததற்குபிறகு மன்றம் அனுமதி வழங்கப்படும்</u>**

**பொருள் எண்.28**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட நெல்லியாளம் கிராமம் 2 ல் புதிய புலன் எண் 205/5 காலையில் 0.20.00 ஹெக்டர் (49.92 சென்ட்) நிலத்தில் கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆரம்பப் பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு நிலம் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 118 /2023, நாள்.30.03.2023 /ஆய்வு செய்ததற்குபிறகு மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.29**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட நெல்லியாளம் கிராமம் 1 ல் புதிய புலன் எண் 1909/1 ல் காலையில் 10 2 சென்ட் நிலம் சுகாதார நிலையம் கட்டிடம் கட்ட கிராம ஆவணங்களின் படி அனாதினம் என்ற பதிவினை கொண்ட அரசு நிலத்தினை துணை சுகாதார நிலைய கட்டிடம் கட்ட நிலமாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 119 /2023, நாள்.30.03.2023 / ஆய்வு செய்ததற்குபிறகு மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.30**

நெல்லியாளம் நகராட்சியில் 2022 - 2023 ஆம் ஆண்டிற்கான தொழில்வரி கேட்பு பதிவேட்டின் படி கீழ்குறிப்பிட்டுள்ள கடைகள், பணிமனைகள், உணவு விடுதிகள் மற்றும் சிறு சிறு தொழில் நிறுவனங்கள் மற்றும் பெட்டிக்கடைகள் பழுதடைந்தும் கடைகள் பூட்டப்பட்ட நிலையில் காணப்படுவதால் இந்த உரிமை தாரர்கள் குறித்து எவ்வித தகவலும் கிடைக்கப்பெறாததாலும் தொழில்வரி கேட்பினை 2022– 2023 பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் அத்தியாவசிய பணிகள் அவசியமாக செய்யப்பட வேண்டியதால் மன்றம் இதனை அனுமதிக்கலாம்.

## NELLIYALAM MUNICIPALITY
## PROFESSIONAL TAX

| S.NO | WARD | ASSESEMENT NO | NAME | AMOUNT |
|---|---|---|---|---|
| 1 | 1 | 067/001/900006 | SUBRAMANI ELAMANNA | 300 |
| 2 | 1 | 067/001/900005 | SUBRAMANI ELAMANNA | 300 |
| 3 | 1 | 067/001/900001 | THE MANAGER NELLIYALAM TEA DIVISION | 915 |
| 4 | 2 | 067/002/900007 | KASILINGAM ELAMANNA | 3040 |
| 5 | 2 | 067/002/900006 | LAKSHMANAN | 2280 |
| 6 | 4 | 067/004/900085 | YESUDASS | 900 |
| 7 | 4 | 067/004/900048 | THANGARAJ PETTY SHOP | 610 |
| 8 | 4 | 067/004/900069 | KRISHNASAMY FRIENDS GENTS WEAR | 610 |
| 9 | 4 | 067/004/900072 | DHANIPAL | 610 |
| 10 | 4 | 067/004/900089 | ILANGO WORK SHOP | 305 |
| 11 | 4 | 067/004/900084 | NOWFAL CRACKER SHOP | 300 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | 4 | 067/004/900061 | SUDHAKAR AVS MOBILE SHOP | 3040 |
| 13 | 4 | 067/004/900063 | ASAPFJAN FANCY | 3040 |
| 14 | 4 | 067/004/900062 | AFSAL VEGETABLE | 305 |
| 15 | 7 | 067/007/900020 | BSNL | 4876 |
| 16 | 7 | 067/007/900216 | INBANATHAN MOBILE SHOP | 3420 |
| 17 | 7 | 067/007/900163 | ARUL SALOON | 3040 |
| 18 | 7 | 067/007/900233 | LAKSHMANAN FOOTWEAR | 3040 |
| 19 | 7 | 067/007/900254 | SAHUL AMEED | 2280 |
| 20 | 7 | 067/007/900212 | JAMSHEER | 2280 |
| 21 | 7 | 067/007/900274 | KARPAKAVALLI | 1050 |
| 22 | 7 | 067/007/900236 | RAJESH | 915 |
| 23 | 7 | 067/007/900197 | RAJA PETTY SHOP | 915 |
| 24 | 7 | 067/007/900198 | SIVA FLOWER MERCHANT | 915 |
| 25 | 7 | 067/007/900225 | ESWARI | 915 |
| 26 | 7 | 067/007/900208 | PARIMALA MALIGAI SHOP | 915 |
| 27 | 7 | 067/007/900258 | RUKUMANI PETTY SHOP | 900 |
| 28 | 7 | 067/007/900294 | JAYALAKSHMI PATTAS SHOP | 600 |
| 29 | 7 | 067/007/900269 | SASIKUMAR VEGETABLE | 600 |
| 30 | 7 | 067/007/900255 | LEENA SIMON | 5000 |
| 31 | 7 | 067/007/900051 | RADHAKRISHNAN | 3040 |
| 32 | 7 | 067/007/900152 | SANTHOSE | 3040 |
| 33 | 7 | 067/007/900215 | NILGIRI PRIST | 3040 |
| 34 | 7 | 067/007/900261 | ANEES CLASSIC PANDALUR | 2280 |
| 35 | 7 | 067/007/900218 | SAFEEF NEW KM BAKERY | 1520 |
| 36 | 7 | 067/007/900231 | SUJATHA TEXTILES | 305 |
| 37 | 7 | 067/007/900195 | ABDUL JABEER TEA DUST | 305 |
| 38 | 7 | 067/007/900053 | ILAYARAJA MALIGAI SHOP | 305 |
| 39 | 7 | 067/007/900056 | SHOUKATH ALI BACKERY | 305 |
| 40 | 7 | 067/007/900137 | ALAVI HARDWARES | 305 |
| 41 | 7 | 067/007/900098 | R.K.RAGUNATH SAKUNTHALA CORPORATION | 1520 |
| 42 | 7 | 067/007/900167 | KRISHNAMOORTHY BAKERY PANDALUR | 915 |
| 43 | 7 | 067/007/900185 | C.SAIFUDEEN TEA SHOP | 915 |
| 44 | 7 | 067/007/900193 | MAMADALI DRY FISH SHOP | 915 |
| 45 | 7 | 067/007/900198 | SIVA FLOWER MERCHANT | 915 |

| | | | | |
|---|---|---|---|---|
| 46 | 7 | 067/007/900209 | VINAYAGA SOUND SERVICE | 915 |
| 47 | 7 | 067/007/900036 | SAIDALAVI FANCY SHOP | 1520 |
| 48 | 7 | 067/007/900234 | SUDHEERBABU REDYMADES | 915 |
| 49 | 7 | 067/007/900232 | CHANDRA KUMAR PETTY SHOP | 915 |
| 50 | 7 | 067/007/900240 | ANNADURAI FRUIT STALL | 915 |
| 51 | 7 | 067/007/900244 | JOTHY FABRICAS | 915 |
| 52 | 7 | 067/007/900092 | SALEEM BAKERY | 915 |
| 53 | 7 | 067/007/900273 | JAISAL STUDIO | 900 |
| 54 | 7 | 067/007/900247 | VISHVALINGAM MESS | 305 |
| 55 | 7 | 067/007/900219 | AHAMED RASEED TEA SHOP | 305 |
| 56 | 7 | 067/007/900192 | THOMAS TYRE PUNCTURE | 125 |
| 57 | 7 | 067/007/900187 | ABDUL SALAM | 305 |
| 58 | 7 | 067/007/900245 | RENISH SPUTINIC FANCY | 125 |
| 59 | 7 | 067/007/900290 | KAVIYARASAN VEGETABLE AND FRUITS | 305 |
| 60 | 8 | 067/008/900001 | CHANDRASEKARAN MALIGAI SHOP | 305 |
| 61 | 8 | 067/008/900031 | PALANIYANDI PETTY SHOP | 125 |
| 62 | 12 | 067/012/900010 | VIJAYALAKSHMI PETTY SHOP | 3040 |
| 63 | 12 | 067/012/900001 | SASTY CLOTH SHOP | 305 |
| 64 | 16 | 067/016/900104 | INDHUMATHI | 3040 |
| 65 | 16 | 067/016/900068 | ABDUL MAJEEB | 2055 |
| 66 | 16 | 067/016/900109 | GANESHMOORTHY | 1520 |
| 67 | 16 | 067/016/900116 | MURUGANATH | 900 |
| 68 | 16 | 067/016/900084 | R.DAVID RAJ | 610 |
| 69 | 16 | 067/016/900096 | JAYAVEERASINGAM | 610 |
| 70 | 16 | 067/016/900113 | MUSTHAFA | 610 |
| 71 | 16 | 067/016/900097 | V.SIVASAMY | 610 |
| 72 | 19 | 067/019/900006 | V.V.BELLI CHICKEN STALL | 915 |
| 73 | 20 | 067/020/900015 | CICILY MARIYA | 610 |

| | | | | |
|---|---|---|---|---|
| 74 | 21 | 067/021/900013 | SHAFEEK FRUITS | 2280 |
| 75 | 21 | 067/021/900068 | MOCHIKKAL MOHAMMED | 2280 |
| 76 | 21 | 067/021/900029 | ABDUL JAFAR | 2280 |
| 77 | 21 | 067/021/900054 | THAI TEA STALL | 2280 |
| 78 | 21 | 067/021/900062 | SAMEER HOTEL | 1220 |
| 79 | 21 | 067/021/900008 | SUBAIR FOOD COURT HOTEL | 250 |
| | | | **TOTAL** | **103246** |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 120 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது</u>**

**<u>பொருள் எண்.31</u>**

நெல்லியாளம் நகராட்சியின் **2022 2023** குடிநீர் கட்டணப்பதிவேட்டில் கீழ்கண்ட குடிநீர் இணைப்புகள் பழுதடைந்து நீண்ட நாள் கட்டணம் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது. இவை உபயோகமற்று இருப்பதாலும் இணைப்பு தேவையில்லை என வரிவிதிப்பு தாரர்கள் கடிதம் அளித்துள்ளதாலும் மேற்படி குடிநீர் இணைப்புகளை துண்டிப்பு செய்வதற்கும், குடிநீர் இணைப்பிற்கான கேட்பினை பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்வதற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வரிவிதிப்பு எண் | பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | 067/007/900130 | முருகவேல் | 628 |
| 2 | 067/008/900068 | சபிக் | 628 |
| 3 | 067/007/900050 | P.W.D | 628 |
| 4 | 067/007/900056 | BSNL | 628 |
| 5 | 067/007/900072 | ஆணையாளர் பஞ்சாயத் யூனியன் | 628 |
| 6 | 067/007/900076 | சர்வேயர் குடியிருப்பு | 628 |
| 7 | 067/008/900040 | முனியம்மாள் குணபாக்கியவதி | 628 |
| 8 | 067/007/900131 | ஜிஜித் | 2452 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 121 /2023, நாள்.30.03.2023 / மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது</u>**

**பொருள் எண்.32– பொது தீர்மானம்**

நெல்லியாளம் நகராட்சி ஆணையாளர் திருமதி.மகேஷ்வரி அவர்கள் இந்நகராட்சியின் ஆணையாளராக பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரையிலும் எவ்விதமான அலுவலக கோப்புகளிலும் உரிய நேரத்தில் கையெழுத்திடுவதில்லை. இதனால் பொது மக்கள் பிறப்பு, இறப்பு சான்றிதழ் உள்ளிட்ட எந்த சான்றிதழ்களும் பெற முயாமலும், மேலும் வளர்ச்சிப் பணிகள் நடைபெறுவதற்கும் இவர் தடையாக உள்ளார். தொடர்ந்து அரசுக்கு எதிராகவே செயல்பட்டு வருகிறார். பொதுவாகவே மக்கள் பிரதிநிதிகளை இவர் மதிக்காத சர்வாதிகாரியாகவே செயல்படுகிறார். கடந்த 12.01.2023 ஆம் தேதியில், குடிநீர் உள்ளிட்ட மிக அத்தியாவசிய தேவைக்காக முறையாக டெண்டர் விடப்பட்டு இந்நாள் வரையிலும் மேற்படி பணிகளுக்கு பணி ஆணை வழங்கப்படவில்லை. மேலும் இப்பணிகள் நடைபெறக் கூடாது என்பதில் அவர் மிக கவனமாக உள்ளார். மேற்படி பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் முன் கூட்டியே தனக்கு ஐந்து சதவீதம் பணமாக கொடுத்து விட்டு பணியாணையை பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறி நிறுத்தி வைத்து உள்ளார்.

இவரால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தி வருகிறார். அவர் தொடர் விடுப்பில் இருப்பதால் பொறுப்பு ஆணையாளரோ, அலுவலர்களோ கோப்புகளில் கையெழுத்திடவே தயங்குகின்றனர். மக்களையும், மக்கள் பிரதி நிதிகளையும் மதிக்காமல் சர்வாதிகாரியாக செயல்படும் மேற்படி மகேஷ்வரி அவர்களை உடனடியாக பணி இட மாற்றம் செய்து நடவடிக்கை எடுத்து அரசுக்கு இவரால் ஏற்படும் அவப்பெயரில் இருந்து காப்பாற்றி மக்களுக்கு தேவையான அடிப்படை வளர்ச்சிப் பணிகளை விரைந்து செயல்படுத்த பேருதவி செய்யுமாறு மன்றத்தின் அனைத்து உறுப்பினர்களின் சார்பில் வழியுறுத்திக்கேட்டு கொள்கிறோம்.

**தீர்மானம் எண். 122 /2023, நாள்.30.03.2023**

ஒப்பம்

**(திருமதி. சி.சிவகாமி.)**
நகர்மன்ற தலைவர்,
நெல்லியாளம் நகராட்சி.

**// உண்மை நகல் //**

ஆணையாளர்,
நெல்லியாளம் நகராட்சி.